டிஜிட்டல் டெய்லி
Kaalaimani.com
காலைமணி.காம்
15.8.2023 செவ்வாய்க்கிழமை • மதுரை • பக்கங்கள் 24 • Online Edition • www.kaalaimani.com

### உயர்கல்வித் துறை சார்பில்

# ரூ.87.77 கோடியில் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடங்கள்

## முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, ஆக.14

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் 87 கோடியே 76 லட்சத்து 93 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகங்கள், விடுதிகள், ஆராய்ச்சி மையம், கருத்தரங்குக்கூடம் மற்றும் செய்கலைஞர் ஆய்வுக்கூடங்கள் போன்ற பல்வேறு கட்டடங்களை திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப்படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், தகுதிவாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர் கல்வியை பயில்வதற்கு புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1000/- உதவித் தொகை வழங்குதல், முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு சலுகைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், காலிப்பணியிடங்களை நிரப்புதல் போன்ற



அனைவருக்கும்
சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்

**விடுமுறை அறிவிப்பு**

15.8.2023 செவ்வாய்க்கிழமை சுதந்திரதினத்தை முன்னிட்டு காலைமணி.காம் நிறுவனத்துக்கு விடுமுறை. எனவே, எமது அடுத்த மின்னிதழ் 17.8.2023 வியாழக்கிழமை வெளிவரும்.

-நிர்வாகி




பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

அந்த வகையில், வேலூர் – தந்தை பெரியார் அரசு தொழில் நுட்பக் கல்லூரியில் 150 மாணவர்கள் தங்கும் வகையில் 8 கோடியே 43 லட்சத்து 9 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதிக் கட்டடம்; கோயம்புத்தூர் – அரசு தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் 8 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டடங்கள்; திருப்பூர் – எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் சிதிலமடைந்துள்ள முதன்மை கட்டடத்திற்கு மாற்றாக 10 கோடியே 94 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடம்;

கோயம்புத்தூர் – பாரதியார் பல்கலைக்கழகத்தில் தற்போதுள்ள நவீன அறிவியல் ஆய்வகக் கட்டடத்தின் மேல்பகுதியில் 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் தளங்கள் மற்றும் 2 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மகாகவி பாரதியார் ஆராய்ச்சி மையம்; நாமக்கல் – என்.கே.ஆர். அரசு மகளிர் கலைக் கல்லூரியில் 3 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 18 கூடுதல் வகுப்பறை கட்டடங்கள்; புதுக்கோட்டை – மாமன்னர் கல்லூரியில் 3 கோடியே 4 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 16 கூடுதல் வகுப்பறை கட்டடங்கள்; காரைக்குடி – அழகப்ப செட்டியார் அரசு பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் 159 மாணவர்கள் தங்கும் வகையில் 8 கோடியே 36 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆண்கள் விடுதிக் கட்டடம்; மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் 3 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மனிதவள மேம்பாட்டு மையத்திற்கான கருத்தரங்குக் கூடம்;

kaalaimani.com in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Phone: 4366425.

திருநெல்வேலியில்– மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் சார்பில் கீழநத்தம் கிராமம், சீவலப்பேரி சாலையில் 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தொலை தூரக் கல்வி மற்றும் தொடர்நிலை கல்வி இயக்ககத்திற்கான கல்வி வளாகக் கட்டடம்; திருநெல்வேலி – அண்ணா பல்கலைக்கழக மண்டல வளாகத்தில் 2 கோடியே 70 லட்சம் ரூபாய் செலவில் 60 மாணவர்கள் தங்கும் வகையில் இரண்டாவது தளத்தில் கட்டப்பட்டுள்ள ஆண்கள் விடுதிக் கட்டடம்; திருச்சிராப்பள்ளி மாவட்டம் – ஸ்ரீரங்கம், சேலம், திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் மதுரை அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் 23 கோடியே 97 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள செய்கலைஞர் ஆய்வுக்கூடங்கள்; திருச்சிராப்பள்ளி, அண்ணா அறிவியல் மையக் கோளரங்கத்தில் 3 கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்பட்ட எண்ணிலக்க முழுக்கோள அமைப்பு கோளரங்கம்; என மொத்தம் 87 கோடியே 76 லட்சத்து 93 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உயர்கல்வித் துறை கட்டடங்களை முதல்வர் திறந்து வைத்தார்.

# நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் வாபக் நிகர லாபம் 67 சதம் அதிகரிப்பு

சென்னை, ஆக.14

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் வாபக் நிகர லாபம் 67 சதம் அதிகரித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இது குறித்து விரிவான செய்தியாவது:

வாபக் நிறுவனத்தின் நிகர லாபம் நடப்பு நிதி ஆண்டின் முதல் காலாண்டில் ரூ.50 கோடியாக உயர்ந்துள்ளது. இது முந்தைய நிதி ஆண்டில் இதே காலகட்டத்தில், இந்நிறுவனம் ஈட்டிய நிகர லாபத்தை விட 67 சதவீதம் அதிகம் ஆகும். 2022-23 நிதி ஆண்டின் ஏப்ரல் முதல் ஜுன் வரையிலான முதலாம் காலாண்டில் இந்நிறுவனம் ரூ.30 கோடி லாபம் ஈட்டியது.

நிறுவனத்தின் வருவாய் நடப்பு நிதி ஆண்டில் முதல் காலாண்டில் ரூ.553 கோடியாக உள்ளது. சென்னையை தலைமையிடமாகக் கொண்ட வாபக் நிறுவனம், நீர் மேலாண்மை தொழில்நுட்பத்தில் செயல்பட்டு வருகிறது.

காலைமணி.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# பிஎல்ஐ திட்டத்தில் பயன்படுத்தாத தொகையை பிற திட்டங்களுக்கு மாற்ற அரசு ஆலோசனை




புது தில்லி, ஆக.14

உற்பத்தி சார் ஊக்குவிப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ.1.97 லட்சம் கோடியில், பயன்படுத்தப்படாத தொகை, பிற திட்டங்களுக்கு மாற்றப்படலாம் என, தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை செயலர் ராஜேஷ் குமார் சிங் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பிஎல்ஐ எனப்படும் உற்பத்தி சார் ஊக்குவிப்பு திட்டத்திற்கான 1.97 லட்சம் கோடி ரூபாயில், பயன்படுத்தப்படாத தொகையை, பிற துறைகளுக்கு அல்லது திருத்தியமைக்கப்பட்ட திட்டங்களுக்கு திருப்பி அனுப்பும் திட்டம் உள்ளது. இதுகுறித்து அமைச்சகங்களுக்கிடையே விவாதிக்கப்பட்டு வருகிறது. ஆனால், இதுவரை இதற்கான கால அவகாசம் குறித்து முடிவாகவில்லை.

தற்போதைய நிலவரப்படி, பிஎல்ஐ திட்டத்தின் கீழ், 733 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக 78,000 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த கணிசமான மூலதனப் பெருக்கம், பல்வேறு துறைகளில் நான்கு லட்சத்திற்கும் அதிகமான வேலை வாய்ப்புகளை உருவாக்க வழிவகுத்தது. பிஎல்ஐ திட்டங்களின் முக்கிய வடிவமைப்பானது, முதலீடுகளை ஈர்ப்பதை முதல் படியாகக் கொண்டுள்ளதால், நல்ல பலனை அது தந்தது.

கடந்த 2021-22ம் நிதியாண்டில் அன்னிய நேரடி முதலீடு 76 சதவீதம் அதிகரித்துள்ளதில் இருந்து, இதை அறிந்து கொள்ள முடியும். இத்திட்டத்தினால் முதலீட்டை ஊக்குவிப்பது மட்டுமின்றி, தொழில்கள் அனைத்திலும் மதிப்பு கூட்டுதலை உறுதி செய்துள்ளன. இதன் வாயிலாக, நாட்டின் உற்பத்திக்கான அடித்தளம் வலுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், வாகனம், வீட்டு உபயோகப் பொருட்கள் தயாரிப்பு உள்ளிட்ட சில துறைகள் அக்டோபர் மாதத்திற்கு பிறகு தனது முழுத்திறனை வெளிப்படுத்தும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ஹீரோன் மார்க் - 2 ட்ரோன்கள் இந்திய விமான படையில் இணைப்பு

புது தில்லி, ஆக.14

ஒரே நேரத்தில், சீனா மற்றும் பாகிஸ்தான் எல்லைகளை கண் காணிக்க கூடிய திறன் உடைய, 36 மணி நேரம் வரை பறக்க கூடிய நவீன, ஹீரோன் மார்க் –2 வகை, ட்ரோன்கள் நம் விமானப் படையில் இணைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இது குறித்து இந்திய விமானப் படையின் விங் கமாண்டர் பங்கஜ் ரானா தெரிவித்துள்ளதாவது: நம் விமானப் படையில் நான்கு புதிய, ஹீரோன் மார்க் – 2 ட்ரோன்கள் எனப்படும், ஆளில்லா சிறிய ரக விமானங்கள் இணைக்கப்பட்டுள்ளன. நீண்ட தூரம் சென்று தாக் ககூடிய ஏவுகணைகள் மற்றும் ஆயுதங்களை உள்ளடக்கிய இந்த ட்ரோன்கள், நம் வடக்கு விமான தளத்தில் பயன்பாட்டில் உள்ளன.

செயற்கைகோள் தகவல் தொடர்பு வசதிகளுடன் கூடிய இந்த வகை ட்ரோன்கள், ஒரே நேரத்தில், 36 மணி நேரம் வரை பறக்ககூடிய திறன் உடையது.நீண்ட தூரத்தில் பறக்கும் போதே, எதிரிகளின் இருப்பிடத்தை, லேசர் விளக்கு வாயிலாக அடையாளம் காட்ட கூடியது. இதன் வாயி லாக, நம் போர் விமானங்கள் எதிரிகளின் இடத்தை குண்டு வீசி அழிக்க இந்த வகை ட்ரோன்கள் பெரிதும் உதவியாக இருக்கும். மேலும், நம் பார்வைக்கு அப்பால் பறக்க கூடிய இந்த வகை ட்ரோன்களால், ஒரு இடத்தில் இருந்து நாட்டையே கண்காணிக்க முடியும். மேலும், இது விமானப்படையின் உளவுப் பிரிவு மற்றும் கண்காணிப்பை ஒருங்கி ணைக்கிறது. தொடர்ந்து 24 மணி நேரம் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ளக்கூடிய இந்த ட்ரோன்களால், ஒரே நேரத்தில், சீனா, பாகிஸ்தான் எல்லைகளை கண்காணிக்க முடியும். 0 டிகிரி செல்ஷியஸ் கடுங்குளிர் முதல், கடும் வெப்பம் வரையிலும், எவ்வித நிலப்பரப்பு களிலும் இவை துல்லியமாக செயல்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# சுந்தரம் ஃபைனான்ஸ் நிகர லாபம் மார்ச் காலாண்டில் 25 சதம் அதிகரிப்பு

சென்னை, ஆக.14

சென்னையில் தலைமையகத்தைக் கொண்டு செயல்பட்டு வரும் வங்கியல்லாத நிதி நிறுவனமான சுந்தரம் ஃபைனான்ஸின் நிகர லாபம் கடந்த மார்ச் காலாண்டில் 25 சதம் அதிகரித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இது குறித்து சுந்தரம் பைனான்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஏப்ரல் முதல் ஜுன் வரையிலான நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் நிறுவனத்தின் நிகர லாபம் ரூ.281 கோடியாக உள்ளது. முந்தைய 2022-23-ஆம் நிதியாண்டின் இதே காலாண்டோடு ஒப்பிடுகையில் இது 25 சதவீதம் அதிகமாகும். அப்போது நிறுவனத்தின் நிகர லாபம் ரூ.226 கோடியாக இருந்தது. அதுபோல், மதிப்பீட்டு காலாண்டில் நிறுவனத்தின் கடன் பட்டுவாடாவும் 32 சதவீதம் அதிகரித்து ரூ.6,489 கோடியாக உள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மத்திய அரசின் பேம் 3 திட்டத்தில் கீழ் ரூ.50,000 கோடி மானியம் வழங்க திட்டம்

புது தில்லி, ஆக.14

மத்திய அரசு, பேம் 3 திட்டத்தின் கீழ், ரூ.50,000 கோடி மானியம் வழங்க திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இது குறித்து விரிவான செய்தியாவது:



இந்தியாவில், மின்சார வாகன உற்பத்தியை ஊக்குவிக்க, மத்திய அரசு கடந்த 2015ம் ஆண்டு, 'பேம்' எனும் திட்டத்தை அறிமுகம் செய்தது. இது பேம் 1, 2 என இரண்டு பதிப்புகளை கொண்டிருந்தன. பேம் 1 திட்டத்தில் ரூ.900 கோடி மானியமும், பேம் 2 திட்டத்தில், ரூ.10,000 கோடி மானியமும் வழங்கப்பட்டன. தற்போது இத்திட்டத்தின் மூன்றாம் பதிப்பான, பேம் 3 திட்டத்தின் முதல் வரைவை, மத்திய அரசு தயாரித்துள்ளது.

பேம் 3 திட்டத்திற்கு, ரூ.40,000-முதல் 50,000 கோடி மானியம் வழங்க அரசு பரிசீலித்து வருவதாக கூறப்படுகிறது. இதுவரை மின்சார இருசக்கர வாகனங்கள், மூன்று சக்கர வாகனங்கள், கார்கள் மற்றும் பேருந்துகளுக்கு வழங்கப்பட்டு வந்த மானியம், தற்போது மின்சார லாரி மற்றும் சில வகை சைக்கிள்களுக்கும் வழங்க வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. மேலும், பேம் 3 திட்டத்தில், மின்சார பேருந்துகள் மற்றும் சார்ஜிங் உள்கட்டமைப்பு ஆகியவற்றை ஆதரிக்க, கணிசமான தொகை ஒதுக்கீடு செய்யப்பட வாய்ப்பு உள்ளது. வரும் 2030ம் ஆண்டு வரை மின்சார வாகன துறைக்கு ஆதரவளிக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் குறித்து அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒருபகுதியாக, மின்சார வாகனங்களுக்கான பேட்டரி தொழில்நுட்பங்களுக்கு, உற்பத்தியுடன் இணைக்கப்பட்ட ஊக்குவிப்பு திட்டத்தை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் மின்சார வாகன பேட்டரிகளை மீண்டும் பயன் படுத்துவதற்கும், மறுசுழற்சி செய்வதற்கும் ஏற்ற வழிகளையும் அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

# நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு 60,145 கோடி டாலராக சரிவு: ஆர்பிஐ தகவல்

மும்பை, ஆக.14

கடந்த 4ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு 60,145 கோடி டாலராக சரிந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.



இது குறித்து ஆர்பிஐயின் புள்ளிவிவரங்கள் தெரிவிப்பதாவது:

கடந்த 4ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு 241.7 கோடி டாலர்கள் சரிந்து 60,145 கோடி டாலராக உள்ளது.இதன் மூலம், நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு தொடர்ந்து 3-வது வாரமாக சரிவைக் கண்டுள்ளது.

ஜூலை 28ம் தேதியுடன் நிறைவடைந்த முந்தைய வாரத்தில் அது 316.5 கோடி டாலர்கள் சரிந்து 60,387 கோடி டாலராக இருந்தது.

அக்டோபர் 2021ல் நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு 64,500 கோடி டாலரை எட்டியது. உலகளாவிய பொருளாதாரச் சூழல்களால் ஏற்படும் அழுத்தங்களுக்கு இடையே ரூபாய் மதிப்பைப் பாதுகாப்பதற்காக அந்நியச் செலாவணி கையிருப்பை ஆர்பிஐ பயன்படுத்துவதால் அது குறைந்து வந்தது.கடந்த 4-ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் அந்நியச் செலாவணி கையிருப்பின் முக்கிய அங்கமான அந்நிய நாணய சொத்துகள் 193.7 கோடி டாலர் குறைந்து 53,340 கோடி டாலராக உள்ளது.டாலர் அல்லாத யூரோ, பவுண்ட், யென் போன்ற பிற செலாவணிகளின் கையிருப்பில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் டாலர் மதிப்பில் கணக்கிடப்படுவது அந்நிய நாணய சொத்துகள் ஆகும்.

மதிப்பீட்டு வாரத்தில் நாட்டின் தங்கம் கையிருப்பு 22.4 கோடி டாலர் சரிந்து 4,468 கோடி டாலராக உள்ளது.சிறப்பு வரைதல் உரிமைகள் 17.1 கோடி டாலர் சரிந்து 1,827.4 கோடி டாலராக உள்ளது.சர்வதேச நிதியத்தில் நாட்டின் கையிருப்பு 8.6 கோடி டாலர் சரிந்து 50.99 கோடி டாலராக உள்ளது என்று ஆர்பிஐயின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

# ஹானர் எக்ஸ்9ஏ ஸ்மார்ட்போன் அறிமுகம் செய்ய திட்டம்



மும்பை, ஆக.14

ஹானர் எக்ஸ்9ஏ ஸ்மார்ட்போன் தான் அறிமுகம் செய்யப்பட உள்ளது.குறிப்பாக இது 5ஜி போன் என்று கூறப்படுகிறது. இதன் சிறப் பம்சங்கள் குறித்து வெளி வந்துள்ளதாவது:

அதாவது ஹானர் எக்ஸ்9ஏ ஸ்மார்ட்போன் வட்ட வடிவ கேமரா அமைப்பைக் கொண்டுள்ளது. அதில் 64எம்பி பிரைமரி கேமரா + 5எம்பி அல்ட்ரா வைடு லென்ஸ் + 2எம்பி மேக்ரோ லென்ஸ் என்கிற ட்ரிபிள் ரியர் கேமரா வசதி உள்ளது. எனவே இந்த ஸ்மார்ட்போனின் உதவியுடன் அட்டகாசமான புகைப்படங்களை எடுக்க முடியும். மேலும் செல்பிகளுக்கும், வீடியோகால் அழைப்புகளுக்கும் என்றே 16எம்பி கேமராவைக் கொண்டுள்ளது இந்த போன். குறிப்பாக இந்த போனின் செல்பி கேமரா உதவியுடன் 1080பி வீடியோக்களை பதிவு செய்ய முடியும். மேலும் இதன் பின்புற கேமராக்கள் நைட் மோட், போர்ட்ரெய்ட் மோட், எச்டிஆர், டைம் லேப்ஸ், சூப்பர் மேக்ரோ மற்றும் பல கேமரா அம்சங்களைக் கொண்டுள்ளது. அதேபோல் எல்இடி பிளாஸ் ஆதரவுடன் இந்த ஹானர் எக்ஸ்9ஏ போன் அறிமுகமாகும்.

ஹானர் எக்ஸ்9ஏ ஸ்மார்ட்போன் குவால்காம் ஸ்னாப்டிராகன் 695 சிப்செட் உடன் அட்ரினோ 619 ஜிபியு ஆதரவைக் கொண்டுள்ளது. மேலும் ஆண்ட்ராய்டு இயங்குதளத்தைக் கொண்டு இந்த புத்தம் புதிய ஹானர் ஸ்மார்ட்போன் வெளிவரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ஹானர் எக்ஸ்9ஏ ஸ்மார்ட்போனில் 6.6-இன்ச் ஃபுல் எச்டி பிளஸ் ஓஎல்இடி வளைந்த டிஸ்பிளே வசதி உள்ளது. எனவே இந்த ஸ்மார்ட்போன் சிறந்த திரை அனுபவம் கொடுக்கும். மேலும் 120 ஹெர்ட்ஸ் ரெஃப்ரெஷ் ரேட், 800 நிட்ஸ் ப்ரைட்னஸ், 300 ஹெர்ட்ஸ் டச் சாம்ப்ளிங் ரேட் மற்றும் சிறந்த பாதுகாப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது இந்த போன்.

5100எம்ஏஎச் பேட்டரியுடன் இந்த ஹானர் எக்ஸ்9ஏ ஸ்மார்ட் போன் வெளிவரும். அதாவது இந்த போன் நீண்ட நேரம் பேட்டரி பேக்கப் வழங்கும். அதேபோல் 40 வாட்ஸ் பாஸ்ட் சார்ஜிங் வசதியைக் கொண்டுள்ளது இந்த ஹானர் எக்ஸ்9ஏ ஸ்மார்ட்போன். ஹானர் எக்ஸ்9ஏ ஸ்மார்ட்போனில் வைஃபை, என்எப்சி, யுஎஸ்பி டைப்-சி போர்ட், புளூடூத் 5.1 உள்ளிட்ட பல கனெக்டிவிட்டி ஆதரவு களுடன் வெளிவரும். மேலும் இந்த ஹானர் எக்ஸ்9ஏ ஸ்மார்ட் போன் ஆனது இந்தியாவில் பட்ஜெட் விலையில் வெளிவரும் என்பதால் அதிக எதிர்பார்ப்புகளை உருவாக்கியுள்ளது.

# கிர்லோஸ்கர் இண்டஸ்ட்ரீஸ் லபாம் 9 சதம் சரிவு

மும்பை, ஆக.14

கிர்லோஸ்கர் இண்டஸ்ட்ரீஸ் லபாம் 9 சதம் சரிவடைந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இது குறித்து விரிவான செய்தியாவது: கிர்லோஸ்கர் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நடப்பு நிதியாண்டின் ஜுன் காலாண்டில் வரிக்கு பிந்தைய ஒருங்கிணைந்த லாபம் 9 சதம் குறைந்து ரூ.94 கோடியாக உள்ளது.

இது குறித்து கிர்லோஸ்கர் இண்டஸ்ட்ரீஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: 2023ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் இந்நிறுவனம் ரூ.102.9 கோடி திரட்டியுள்ளது. மதிப்பீட்டு காலாண்டில் மொத்த வருவாய் ரூ.1,518.2 கோடியாக இருந்தது. இது முந்தைய நிதியாண்டின் இதே காலாண்டில் ரூ.1,513.5 கோடியாக இருந்தது.

கிர்லோஸ்கர் இண்டஸ்ட்ரீஸ் நிர்வாக இயக்குநர் மகேஷ் சாப்ரியா தெரிவிக்கையில்,நிறுவனம் இப்போது அதன் வணிக மறுசீரமைப்பு திட்டத்தின் ஒரு அற்புதமான கட்டத்திற்குள் நுழைந்துள்ளது. அவண்டேவின் முதல் திட்டம் திட்டமிட்டபடி முன்னேறி வருகிறது என்றார். கிர்லோஸ்கர் இண்டஸ்ட்ரீஸ் தனது துணை நிறுவனமான அவண்டே ஸ்பேசஸ் லிமிடெட் ஜுன் 30ஆம் தேதியன்று 27,24,868 முழுமையாக செலுத்தப்பட்ட ஈக்விட்டி பங்குகளை நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



## பெலகாவி - புது தில்லிக்கு இடையே

# அக்.1 முதல் விமான சேவை தொடக்கம்

பெலகாவி, ஆக.14

பெலகாவி – புது தில்லி இடையே, அக்டோபர் 1ம் தேதி முதல் இண்டிகோ ஏர்லைன்ஸ் நிறுவனம், விமான சேவையை துவக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இது குறித்து விரிவான செய்தியாவது: பெலகாவியில் இருந்து புது தில்லிக்கு இயங்கி வந்த ஸ்பைஸ் ஜெட் நிறுவன விமானம், பயணியர் வருகைவால், தன் சேவையை நிறுத்தியிருந்தது. இந்நிலையில், பெலகாவி எம்.பி., ஈரன்ன கடடி, எக்ஸ் எனும் சமூக வலைதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இன்டிகோ ஏர்லைன்ஸ் நிறுவனத்துடன் நடத்திய பேச்சு சுமுகமாக முடிந்தது. பெலகாவியில் இருந்து புது தில்லிக்கு அக்டோபர் 1ம் தேதி முதல் தினசரி பயணியர் விமானத்தை இயக்க, ஒப்புக் கொண்டுள்ளது. அத்துடன், அக்., 31ம் தேதி முதல் செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில், பெலகாவியில் இருந்து புனேவுக்கு வாரத்தில் மூன்று நாட்கள் விமானம் இயக்கப்பட உள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.



### இந்து சமய அறநிலையத்துறை சார்பில்

# ரூ.80.56 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய திட்டப் பணிக்கான கட்டுமானப் பணிகள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்

சென்னை, ஆக.14

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 80 கோடியே 56 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோயில்களில் கட்டப்படவுள்ள திருமண மண்டபம், திருக்குளப் பணிகள், பக்தர்கள் தங்கும் விடுதி, வணிக வளாகம், தடுப்புச் சுவர்கள், முடிகாணிக்கை மண்டபம், பக்தர்கள் இளைப் பாறும் மண்டபம், உணவருந்தும் கூடம், அடுக்குமாடி குடியிருப்புகள், கல்லூரி ஆய்வகங்கள் போன்ற புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்து சமய அறநிலையத்துறை அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வரலாற்று சிறப்புமிக்க திட்ட செயலாக்கம், 866க்கும் மேற்பட்ட திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு, திருத்தேர் களை பழுதுபார்த்து வீதிஉலா, திருக்குளங்களை புனரமைத்தல், பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் மீட்பு, அன்னதானத் திட்டம் விரிவாக்கம், மலைத் திருக்கோயில்கள் மற்றும் முக்கிய திருக் கோயில்களில் மருத்துவ மையங்கள், புதிய கல்வி நிறுவனங்கள் தொடக்கம், ஒருகால பூஜை திட்டம் விரிவாக்கம், துறையின் செயல் பாடுகளை கணினிமயமாக்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருவதோடு, சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகளும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் இதுநாள்வரை 6,962 திருக்கோயில்களில் 3,373 கோடி ரூபாய் செலவில் 9,294 திருக்கோயில் திருப்பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அந்த வகையில், கோயம்புத்தூர் மாவட்டம் – தேக்கம்பட்டி, அருள்மிகு வனபத்ர காளியம்மன் திருக்கோயிலில், 14.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுற்று பிரகார மண்டபம், நடை பாதை மண்டபம், சுற்றுச்சுவர் மற்றும் முடிகாணிக்கை மண்டபம் அமைக்கும் பணிகள்; மதுரை மாவட்டம்– திருப்பரங்குன்றம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தெப்பக் குளத்தையொட்டி தடுப்புச் சுவர் அமைத்தல் மற்றும் கந்த சஷ்டி மண்டபம் கட்டும் பணிகள்; திருவள்ளூர் மாவட்டம் – திருவேற்காடு, அருள்மிகு தேவி கருமாரியம்மன்

திருக்கோயிலில் 4.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்கள் காத்திருக்கும் கூடம், உணவருந்தும் கூடம் கட்டும் பணிகள்; சேலம் மாவட்டம் – மேச்சேரி, பத்ரகாளியம்மன் திருக்கோயிலில் 4.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்கள் தங்கும் விடுதி, உணவருந்தும் கூடம் மற்றும் செயல் அலுவலர்கள் குடியிருப்பு கட்டும் பணிகள்; பள்ளிக்கரணை, அருள்மிகு வீரத்தம்மன் திருக்கோயிலில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டும் பணி; நார்த்தாமலை, அருள்மிகு முத்து மாரியம்மன் திருக் கோயிலில் 3.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டும் பணி; தாமரங்கோட்டை, அருள்மிகு கண்டேஸ்வரர் திருக்கோயிலில் 3.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டும் பணி; திருவள்ளூர் மாவட்டம் – சிறுவாபுரி, அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 3.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்குளத் திருப்பணி; திருக்கோவிலூர், அருள்மிகு திருவிக்ரம சுவாமி திருக்கோயிலில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தெப்பக்குளம் மற்றும் தீர்த்தக்குளங்களை சீரமைத்து நீராழி மண்டபம் கட்டும் பணி;

சிதம்பரம், அருள்மிகு தில்லையம்மன் திருக்கோயிலில் 2.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருக்குளம் மேம்படுத்தும் பணி; சைதாப்பேட்டை அருள்மிகு காரணீஸ்வரர் திருக்கோயிலில் 2.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணியாளர் குடியிருப்பு கட்டும் பணி; மேல்மலையனூர், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலில் 1.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டும் பணி; வலங்கைமான், அருள்மிகு மகா மாரியம்மன் திருக்கோயிலில் 1.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்காணிக்கை மண்டபம் மற்றும் பக்தர்கள் இளைபாறும் மண்டபம் கட்டும் பணி; குமாரவயலூர், அருள்மிகு ப்பிரமணிய வாமி திருக்கோயிலில் 1.79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முன் மண்டபத்தை சீரமைக்கும் பணி;

திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் சார்பில் 8.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் பணிகள்; மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் 1.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அன்னதானக் கூடம் கட்டும் பணி; சிக்கல், அருள்மிகு நவநீதேஸ்வர சுவாமி திருக்கோயிலில் 1.07 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டும் பணி; ஓசூர், அருள்மிகு காளிகாம்பாள் காமாட்டீஸ்வார் திருக்கோயிலில் 76 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மலர் வணிக வளாகம் கட்டும் பணி; பழனி, அருள்மிகு பழனியாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரியில் 5.52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆய்வகங்கள் கட்டும் பணி; என மொத்தம் 80 கோடியே 56 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப் படவுள்ள புதிய திட்டப் பணிகளுக்கான கட்டுமானப் பணிகளுக்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

# ட்விட்டரின் வருவாய் பகிர்வு ஜிஎஸ்டி வரம்புக்குள்பட்டது: நிபுணர்கள் தகவல்

புது தில்லி, ஆக.14

விளம்பரம் மூலமாகக் கிடைக்கும் வருவாயைப் பகிரும் ட்விட்டர் (தற்போது எக்ஸ்) நிறுவனத்தின் திட்டத்தின் கீழ் பலனடையும் இந்தியப் பயனாளர்களுக்கு சரக்கு–சேவை வரி (ஜிஎஸ்டி) விதிக்கப்படும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இது குறித்து விரிவான செய்தியாவது: ட்விட்டர் நிறுவனத்தைக் கடந்த ஆண்டு கையகப்படுத்திய தொழிலதிபர் எலான் மஸ்க், அதன் வருவாயை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அதன் ஒரு பகுதியாக, விளம்பரம் மூலமாக ட்விட்டர் நிறுவனத்துக்குக் கிடைக்கும் வருவாயை சந்தா செலுத்தி வரும் பயனாளர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான திட்டத்தை அவர் அறிவித்துள்ளார்.




அத்திட்டத்தின் கீழ் வருவாய்ப் பகிர்வைப் பெறுவதற்குக் கடந்த 3 மாதங்களில் இடப்பட்ட பதிவுகளுக்கு 1.5 கோடிக்கும் அதிகமான பார்வையாளர்களைக் கொண்டுள்ளதோடு குறைந்தபட்சம் 500 பின்தொடர்பவர்களையும் பயனாளர்கள் கொண்டிருக்க வேண்டும் என ட்விட்டர் நிறுவனம் அறிவித்துள்ளது.

ட்விட்டரின் அத்திட்டத்தின் கீழ் இந்தியப் பயனாளர்கள் பெறும் வருவாய்க்கு 18 சதவீத ஜிஎஸ்டி விதிக்கப்படும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். பலவித சேவைகள் மூலமாகக் கிடைக்கும் ஆண்டு வருவாய் ரூ.20 லட்சத்தைக் கடக்கும்போது அதற்கு ஜிஎஸ்டி விதிக்கப்பட்டு வருகிறது. சொத்துகளை வாடகைக்கு விடுவதன் மூலமாகக் கிடைக்கும் வருவாய், வங்கிகளில் நிரந்தர வைப்புத் தொகை மூலமாகக் கிடைக்கும் வட்டி வருவாய், இதர நிபுணத்துவ பணிகளுக்காகக் கிடைக்கும் வருவாய் உள்ளிட்டவை பலவித சேவைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. ட்விட்டரின் விளம்பர வருவாய்ப் பகிர்வும் இதன் கீழ் வரும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

அவ்வாறான சூழலில், ட்விட்டரின் புதிய திட்டத்தின் மூலமாக வருவாய் ஈட்டும் பயனாளர், பலவித சேவைகள் மூலமாக ஆண்டுக்கு ரூ.20 லட்சத்துக்கு அதிகமாக வருவாய் ஈட்டும்போது, கூடுதல் வருவாய்க்கு மட்டும் ஜிஎஸ்டி செலுத்த நேரிடும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

# நாட்டின் 9 முக்கிய நகரங்களில் விற்பனையாகாமல் இருக்கும் வீடுகளின் எண்ணிக்கை 5.15 லட்சம்

## ப்ராப்ஈக்விட்டி புள்ளிவிவரம் தகவல்



புது தில்லி, ஆக.14

தரவு ஆய்வு நிறுவனமான ப்ராப்ஈக்விட்டி, இந்தியாவில் விற்பனையாகாமல் இருக்கும் வீடுகள் தொடர்பான புள்ளி விவரங்களை வெளியிட்டுள்ளது.

அதாவது, நாட்டின் 9 முக்கிய நகரங்களில் விற்பனையாகாமல் இருக்கும் வீடுகளின் எண்ணிக்கை 5.15 லட்சம் உள்ளதாக ப்ராப்ஈக்விட்டி நிறுவனம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இந்தியாவின் 9 முக்கிய நகரங்களில் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் ப்ராப்ஈக்விட்டி நிறுவனம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. இந்த 9 நகரங்களில் மொத்தம் 5,15,169 வீடுகள் விற்பனையாகாமல் உள்ளன. இவ்வாண்டு மார்ச் மாத நிலவரப்படி அந்த எண்ணிக்கை 5,26,914 ஆக இருந்தது. அந்த வகையில், மார்ச்சுடன் முடிந்த காலாண்டுடன் ஒப்பிடுகையில், ஏப்ரல் – ஜூன் காலண்டில் விற்கப்படாத வீடுகளின் எண்னிக்கை 2 சதவீதம் குறைந்துள்ளது.

அதிகபட்சமாக, மும்பையில் உள்ள தானே நகரில் அதிகபட்ச அளவில் வீடுகள் விற்பனையாகாமல் உள்ளன. நடப்பு நிதி ஆண்டில் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான முதல் காலாண்டில் தானேயில், கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளில் 1.07 லட்சம் வீடுகள் விற்பனையாகாமல் உள்ளன.

இந்தப் பட்டியலில், மிகக் குறைந்த அளவாக, சென்னை யில் 19,900 வீடுகள் விற்பனையாகாமல் உள்ளன. தானே (1,07,179), ஹைதராபாத் (99,989), புனே (75,905), மும்பை (60,911), பெங்களூரு (52,208), டெல்லி (42,133), நவி மும்பை (32,997), கொல்கத்தா (21,947), சென்னை (19,900) என்ற எண்ணிக்கையில் வீடுகள் விற்பனையாகாமல் உள்ளன. ஜனவரி–மார்ச் காலாண்டுடன் ஒப்பிடுகையில், சென்னையில் விற்பனையாகாத வீடுகளின் எண்ணிக்கை 18 சதவீதம் குறைந்துள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 8000 எம்ஏஹெச் பேட்டரியுடன் உருவாகும் ரெட்மி பேட் எஸ்இ

மும்பை, ஆக.14

ரெட்மி பேட் எஸ்இ விரைவில் அறிமுகம் செய்யப்படும் என்று செய்திகள் வெளியாகி உள்ளது. இந்த டேப்லெட்- விலை, அம்சங்கள் மற்றும் ரெண்டர்கள் இணையத்தில் லீக் ஆகி இருக்கின்றன. தற்போது லீக் ஆகி இருக்கும் ரெண்டர்களின் படி புதிய ரெட்மி டேப்லெட் 3 விதமான வண்ணங்களில் கிடைக்கும் என்று தெரியவந்துள்ளது. இத்துடன் மெட்டாலிக் பில்டு கொண்டிருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. இதன் அம்சங்களை பொருத்தவரை புதிய ரெட்மி பேட் எஸ்இ மாடலில் ஸ்னாப்டிராகன் 680 பிராசஸர், 4 ஜிபி ரேம், 128 ஜிபி மெமரி வழங்கப்படுகிறது. இத்துடன் 11 இன்ச் 1200x1920 பிக்சல் ரெசல்யூசன் கொண்ட 90எர்ட்ஸ் ரிப்ரெஷ் ரேட் டிஸ்ப்ளே, குவாட் ஸ்பீக்கர்கள், டால்பி அட்மோஸ் போன்ற வசதிகள் வழங்கப்படுகின்றன.

இத்துடன் 8000 எம்ஏஹெச் பேட்டரி, 10 வாட் சார்ஜிங் வசதி வழங்கப்படுகிறது. மேலும் ஆண்ட்ராய்டு 13 சார்ந்த மியூ 14, 8 எம்பி பிரைமரி கேமரா, 5 எம்பி செல்ஃபி கேமரா, குவாட் ஸ்பீக்கர்கள், டால்பி அட்மோஸ் வசதி வழங்கப்படுகிறது. கனெக்டிவிட்டிக்கு வைபை, ப்ளூடூத் 5, யுஎஸ்பி டைப் சி போர்ட், 3.5mm ஆடியோ ஜாக், ஆம்பியன்ட் லைட் சென்சார், அக்செல்லோமீட்டர், ஹால் சென்சார் வழங்கப்படுகிறது. ரெண்டர்களின் படி ரெட்மி பேட் எஸ்இ மாடல் கிரே, கிரீன் மற்றும் பர்பில் என மூன்று விதமான நிறங்களில் கிடைக்கிறது. இதன் ஒட்டுமொத்த டிசைன் ரெட்மி பேட் போன்றே காட்சியளிக்கிறது. இதன் விலை ரூ. 14,999 என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.



# கார், வீட்டுக் கடன்களுக்கான வட்டியை மகராஷ்ட்ரா வங்கி குறைத்தது

மும்பை, ஆக.14

மத்திய அரசுக்குச் சொந்தமான மகாராஷ்டிர வங்கி (பிஓஎம்), தாங்கள் வழங்கும் கார் மற்றும் வீட்டுக் கடன்களுக்கான வட்டி விகிதங்களை 20 அடிப்படைப் புள்ளிகள் வரைக் குறைத்துள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளது. இது குறித்து மகராஷ்ட்ரா வங்கி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மகாராஷ்ட்ரா வங்கி வழங்கும் கார் கடன்கள் மற்றும் வீட்டுக் கடன்களுக்கான வட்டி விகிதங்கள் 20 அடிப்படைப் புள்ளிகள் (0.20 சதவீதம்) வரை குறைக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, வீட்டுக் கடன் களுக்கான வட்டி விகிதம் 8.60 சதத்திலிருந்து 8.50 சதமாகவும், கார்க் கடன்களுக்கான வட்டி விகிதம் 8.90 சதத்திலிருந்து 8.20 சதமாகவும் குறைக்கப்படுகின்றன. மேலும், புதிய விகிதங்கள் ஆக.14 முதல் அமலுக்கு வந்துள்ளன. இது தவிர, கார் மற்றும் வீட்டுக் கடன்களுக்கான செயலாகக் கட்டணமும் தள்ளுபடி செய்யப் படுகிறது என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஜூன் மாதத்தில் தொழிலக உற்பத்தி வளர்ச்சியில் சரிவு
## தேசிய புள்ளியல் அலுவலகம் அறிக்கை



புது தில்லி, ஆக.14

கடந்த ஜூன் மாதத்தில் நாட்டின் தொழிலக உற்பத்தி வளர்ச்சி கடந்த 3 மாதங்கள் காணாத சரிவைக் கண்டுள்ளதாக தேசிய புள்ளியியல் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கடந்த பிப்ரவரி மாதத்தில் நாட்டின் தொழிலக உற்பத்தி வளர்ச்சிக் குறியீட்டு எண்ணான ஐஐபி 5.8 சதமாக இருந்தது. அது, கடந்த மார்ச் மாதத்தில் 1.1 சதமாக சரிந்தது. இது, கடந்த 5 மாதங்கள் காணாத வீழ்ச்சியாகும். இதற்கு முன்னர் கடந்த 2022 அக்டோபரில் 4.1 சதமாக இருந்ததே குறைந்தபட்ச தொழிலக உற்பத்தி வளர்ச்சியாக இருந்தது. அதற்குப் பிறகு, ஐஐபி கடந்த ஏப்ரல் மாதத்தில் 4.2 சதமாக அதிகரித்தது.

இந்த நிலையில், தொழிலக உற்பத்தி வளர்ச்சி எண் ஐஐபி கடந்த ஜூன் மாதத்தில் 3.7 சதமாகப் பதிவாகியுள்ளது. இது, கடந்த 3 மாதங்கள் காணாக குறைந்தபட்ச ஐஐபி-யாகும். உற்பத்தித் துறையின் மந்தமான செயல்பாடு காரணமாக கடந்த ஜூன் மாதத்தில் உற்பத்தி வளர்ச்சி விகிதம் சரிந்தது. கடந்த 2022 ஜூன் மாதத்தில் 12.9 சதமாக இருந்த உற்பத்தித் துறை ஐஐபி, இந்த ஆண்டின் அதே மாதத்தில் 3.1 சதவீதமாக சரிந்துள்ளது. கடந்த ஆண்டு ஜூனில் 16.4 சதமாக இருந்த மின் உற்பத்தித் துறை ஐஐபி இந்த ஆண்டின் அதே மாதத்தில் 4.2 சதமாக சரிந்துள்ளது.

மதிப்பீட்டு மாதத்தில் சுரங்கத் துறை ஐஐபி 7.8 சதத்திலிருந்து 7.6 சதமாக சரிந்துள்ளது.

2022, ஜூன் மாதத்தில் 25.2 சதவீதமாக இருந்த நுகர்வோர் பொருள்கள் துறை ஐஐபி கடந்த ஜூனில் 6.9 சதமாக சரிந்துள்ளது. உள்கட்டமைப்பு, கட்டுமானப் பொருள்கள் துறையின் ஐஐபி கடந்த ஜூன் மாதத்தில் 11.3 சதமாக வளர்ச்சியடைந்துள்ளது. இது ஓராண்டுக்கு முந்தைய ஜூன் மாதத்தில் 9.4 சதமாக இருந்தது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடந்த 9 மாதங்களில் மட்டும் 50 ஆயிரம் வாகனங்கள் உற்பத்தி: டாடா மோட்டார்ஸ்

மும்பை, ஆக.14

இந்திய ஆட்டோமொபைல் சந்தையின் எலெக்ட்ரிக் வாகன பிரிவில் டாடா மோட்டார்ஸ் நிறுவனம் முன்னணி இடத்தில் இருந்து வருகிறது.



அந்த வகையில், எலெக்ட்ரிக் வாகன உற்பத்தியில் ஒரு லட்சம் யூனிட்களை உற்பத்தி செய்து இருப்பதாக அறிவித்து இருக்கிறது. இதில் கடந்த ஒன்பது மாதங்களில் மட்டும் 50 ஆயிரம் எலெக்ட்ரிக் வாகனங்களை உற்பத்தி செய்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இது குறித்து விரிவான செய்தியாவது: தற்போது டாடா மோட்டார்ஸ் நிறுவனம் மட்டும் தான் அனைத்து வித பாடி ஸ்டைல்களிலும் எலெக்ட்ரிக் வாகனங்களை விற்பனை செய்து வருகிறது. அந்த வகையில் ஹேச்பேக் பிரிவில் (டியாகோ EV), செடான் பிரிவில் (டிகோர் EV) மற்றும் எஸ்.யு.வி. பிரிவில் (நெக்சான் EV) போன்ற மாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இத்துடன் எக்ஸ்பிரஸ் டி, டிகோர் இவி மாடலின் வாடகை கார் வெர்னும் விற்பனை செய்து வருகிறது. டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் அனைத்து எலெக்ட்ரிக் வாகனங்களின் விலையும் ரூ.8 லட்சத்து 69 ஆயிரம் என்று துவங்கி அதிகபட்சம் ரூ.19 லட்சத்து 29 ஆயிரம் வரை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

அனைத்து விலைகளும் எக்ஸ்-ஷோரும் அடிப்படையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. 2028 ஆண்டு இந்தியாவின் எலெக்ட்ரிக் வாகன சந்தையில் பத்து லட்சம் யூனிட்கள் வரை இருக்கும் என்று டாடா மோட்டார்ஸ் நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இதில் 20 சதம் யூனிட்கள் எலெக்ட்ரிக் பவர்டிரெயின் கொண்டிருக்கும் என்று தெரிவித்திருக்கிறது.

# ஹோண்டா சிடி110 புது வேரியன்ட் இந்திய சந்தையில் அறிமுகம்




சென்னை, ஆக.14

ஹோண்டா மோட்டார்சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் இந்தியா நிறுவனம் முற்றிலும் புதிய சிடி110 டிரீம் டீலக்ஸ் மாடலை இந்திய சந்தையில் அறிமுகம் செய்திருப்பதாக செய்திகள் வெளியாகி யுள்ளது. இதன் விலை ரூ. 73 ஆயிரத்து 400, எக்ஸ்-ஷோரூம் என்று நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

புதிய மாடலில் ஓபிடி-2 விதகளுக்கு பொருந்தும் என்ஜின் மற்றும் ஹோண்டா என்ஹான்ஸ்டு ஸ்மார்ட் பவர் சிஸ்டம் வழங்கப்படுகிறது. ஹோண்டா சிடி110 டிரீம் டீலக்ஸ் மாடலில் ஏசிஜி ஸ்டார்டர் மோட்டார் வழங்கப்படுகிறது. இத்துடன் சைலன்ட் ஸ்டார்ட் மெக்கானிசம், ப்ரோகிராம் செய்யப்பட்ட ஃபியூவல் இன்ஜெக்சன், டியூப்லெஸ் டயர்கள், இன்-பில்ட் சைடு-ஸ்டான்டு என்ஜின் கட்-ஆஃப் வசதி வழங்கப்படுகிறது.

புதிய ஹோண்டா சிடி110 மாடல் பத்து ஆண்டுகள் வாரண்டியுடன் வழங்கப்படுகிறது. இதில் மூன்று ஆண்டுகள் ஸ்டான்டர்டு வாரண்டி, ஏழு ஆண்டுகளுக்கு ஆப்ஷனலாக நீட்டிக்கப்பட்ட வாரண்டி வழங்கப்படுகிறது.ஹோன்டா சிடி ம்110 டிரீம் டீலக்ஸ் மாடலில் 109.51சிசி, ஏர்-கூல்டு என்ஜின் வழங்கப்பட்டு இருக்கிறது. இந்த என்ஜின் 8.67 ஹைச்.பி. பவர், 9.30 நியூட்டன் மீட்டர் டார்க் இழுவிசையை வெளிப்படுத்தும் திறன் கொண்டிருக்கிறது. இத்துடன் 4-ஸ்பீடு கியர்பாக்ஸ் வழங்கப்படுகிறது.

சஸ்பென்சனுக்கு முன்புறம் டெலிஸ்கோபிக் ஃபோர்க்குகள், டுவின் ஷாக் அப்சார்பர்கள் வழங்கப்படுகின்றன. இதன் இருபுறங்களிலும் டிரம் பிரேக்குகள் மற்றும் கம்பைன்டு பிரேக்கிங் சிஸ்டம் வழங்கப்படுகிறது.

# தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் வரிக்கு முந்தைய லாபம் ரூ.200.24 கோடி ஈட்டியது

சென்னை, ஆக.14

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை இல்லாத அளவு அதிக வருவாயை ஈட்டியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இது குறித்து விரிவான செய்தியாவது: கடந்த ஜூன் 30-ம் தேதியுடன் முடிவடைந்த காலாண்டு நிதிநிலை அறிக்கையின்படி நிறுவனத்தின் மொத்த வருவாய் ரூ.1,273.44 கோடியாக உள்ளது. இது கடந்த ஆண்டு இதேகாலகட்டத்தில் ரூ.1,136.06 கோடியாக இருந்தது. இது 12.09 சதவீத உயர்வாகும்.

கடந்த ஆண்டில் ரூ.176.39 கோடியாக இருந்த வட்டி, தேய்மானம் மற்றும் வரிக்கு முந்தைய லாபம் தற்போது 84.16 சதவீதம் வளர்ச்சி பெற்று ரூ.324.84 கோடியாக உள்ளது. தேய்மானத்துக்காக ரூ.69.66 கோடி, நிதிச் செலவுக்காக ரூ.55.94 கோடி ஒதுக்கிய பிறகு, நிறுவனத்தின் வரிக்கு முந்தைய லாபம் ரூ.200.24 கோடியாக உள்ளது. இது கடந்த ஆண்டில் ரூ.92.97 கோடியாக இருந்தது குறிப்பிடத்தக்கது. அதேபோல ரூ.60.40 கோடியாக இருந்த வரிக்கு பிந்தைய லாபம் தற்போது ரூ.128.66 கோடியாக வளர்ச்சி பெற்றுள்ளது.

மேலும், நிறுவனத்தின் காகித உற்பத்தி 1,05,499 டன்னாக உள்ளது.இது முந்தைய ஆண்டில் 1,06,584 டன்னாக இருந்தது. காகித அட்டை உற்பத்தி 45,012 டன்னிருந்து 47,704 டன்னாக அதிகரித்துள்ளது. இவ்வாறு டிஎன்பிஎல் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இந்தியர்கள் தங்கள் ஆண்டு வருமானத்தில், 20 சதம் வரை மருத்துவ தேவைக்காக செலவிடுகின்றனர்: ஆய்வில் தகவல்

புது தில்லி, ஆக.14

இந்தியாவில் கிராமப்புறம் மற்றும் சிறிய நகரங்களில் வசிப்போர் தங்கள் ஆண்டு வருமானத்தில், 20 சதம் வரை மருத்துவ தேவைக்காக செலவிடுவது ஆய்வில் தெரிய வந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இது குறித்து விரிவான செய்தியாவது: கிளையில்லா வங்கி சேவையை டிஜிட்டல் முறையில் வழங்கி வரும் பேநியர்பை நிறுவனம் நடத்திய ஆய்வில், கிராமங்கள் மற்றும் சிறிய நகரங்களில் வசிப்போரில், 25 சதம் பேர் மட்டுமே தங்கள் பகுதியில் மருத்துவ வசதியை பெற்றிருப்பதாக தெரிய வந்துள்ளது. கிராமங்களில், 10 சதம் பேருக்கு மட்டுமே 10 கி.மீ., சுற்றளவில் மருத்துவ சேவை வசதி இருப்பதாக தெரிவித்துள்ளனர். மேலும், இந்த பகுதிகளில் வசிப்போர் தங்கள் ஆண்டு வருமானத்தில், 15 முதல் 20 சதவீதத்தை மருத்துவ சேவைக்காக செலவிடுவதும், இவர்களில் 23 சதவீதம் பேர் இதற்காக கடன் வசதியை நாடுவதும் தெரிய வந்துள்ளது. மருத்துவ செலவுகளுக்காக சொத்துக்களை விற்க நேருவதாக, 6 சதவீதம் பேர் தெரிவித்துள்ளனர்.



# பவர் டிரேடிங் கார்ப்பரேசன் ஆஃப் இந்தியா நிகர லாபம் 5.62 சதம் அதிகரிப்பு




புது தில்லி, ஆக.14

நடப்பு நிதியாண்டின், ஏப்ரல் முதல் ஜூன் வரையான காலாண்டில், பவர் டிரேடிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா நிறுவனத்தின் நிகர லாபம், 5.62 சதவிகிதம் அதிகரித்து, ரூ.142.70 கோடியாக அதிகரித்துள்ளது. ஜூன் 30, 2022 உடன் முடிவடைந்த காலாண்டில் நிறுவனத்தின் ஒருங்கிணைந்த நிகர லாபம் ரூ.135.10 கோடியாக இருந்தது. மதிப்பீட்டு காலாண்டில் நிறுவனத்தின் மொத்த வருவாய் ரூ.4,310.74 கோடியிலிருந்து அதிகரித்து ரூ.4,863.46 கோடியானது.

வலுவான வளர்ச்சி மற்றும் திறமையான செயல்பாட்டு மூலதன மேலாண்மை ஆகியவற்றால் நிறுவனத்தின் லாபம் 21 சதவிகிதம் வளர்ச்சி எட்டியுள்ளது என்று பவர் டிரேடிங் கார்ப்பரே-சன் ஆஃப் இந்தியா லிமிடெட் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ரஜிப் கே மிஸ்ரா தெரிவித்தார்.

இந்த நிதியாண்டின் முதல் காலாண்டில் நிறுவனம் இதுவரை இல்லாத அளவுக்கு வரிக்கு முன்பும், பிறகும் லாபம் அடைந்துள்ளதாக மிஸ்ரா தெரிவித்தார். ஹிந்துஸ்தான் பவர் எக்ஸ்சேஞ்ச், பவர் டிரேடிங் கார்ப்பரேன் ஆஃப் இந்தியா லிமிடெட் நிதியுதவியுடன், வணிக அளவுகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைந்து வருகிறது என்ற நிலையில், மத்திய அரசின் சமீபத்திய கொள்கை முன்முயற்சிகள் இந்துஸ்தான் பவர் எக்ஸ்சேஞ்ச் வளர்ச்சி வாய்ப்புகளை மேம்படுத்தும் ஒரு சாதகமான வணிக சூழலை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சுதந்திர தின ஸ்பெசல் பயனர்களுக்கு சூப்பர் சலுகைகள் அறிவித்த வி நிறுவனம்




மும்பை, ஆக.14

வோடபோன் ஐடியா (வி) நிறுவனம் தனது பிரீபெயிட் பயனர்களுக்கு புதிய சலுகைகளை அறிவித்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இது குறித்து விரிவான செய்தி யாவது: இந்தியாவின் 77-வது சுதந்திர தினத்தை ஒட்டி புதிய சலுகைகள் அறிவிக்கப்பட்டு உள்ளது. இவை ஆகஸ்ட் 12-ம் தேதி துவங்கி ஆகஸ்ட் 18-ம் தேதி வரை வழங்கப்பட இருக்கிறது. மேலும் இவை வி நிறுவனம் அதிகாரப்பூர்வ செயலியில் மட்டுமே வழங்கப்படுகிறது.

வி நிறுவனத்தின் சுதந்திர தின சலுகை விவரங்கள்: ரூ.199 மற்றும் அதற்கும் அதிக தொகை கொண்ட ரிசார்ஜ்களுக்கு அதிகபட்சம் 50 ஜிபி வரையிலான டேட்டா. ரூ. 50, ரூ.75, ரூ.1449 மற்றும் ரூ. 3 ஆயிரத்து 099 ரிசார்ஜ்களுக்கு உடனடி தள்ளுபடி. வி செயலியில் ஸ்பின் தி வீல் பரிசு போட்டி நடைபெறுகிறது. இதில் பயனர்களுக்கு ரிசார்ஜ் சலுகைகள் அல்லது டேட்டா பேக், சோனிலிவ் சந்தா மற்றும் பல்வேறு சலுகைகள் வழங்கப்படுகின்றன. இந்த சலுகைகள் அனைத்தும் ஆண்ட்ராய்டு மற்றும் ஐபோனுக்கான வி செயலியில் பிரத்யேகமாக வழங்கப்படுகிறது.

